செ.வெ.எண்: 9 / பிப்ரவரி /2020 நாள்: 03.02.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தாட்கோ அலுவலகம் மூலம் தொழில் முனைவோர் திட்டம் மற்றும் இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 12 பயனாளிகளுக்கு ரூ.68,35,385 மதிப்பில் வங்கி கடனுதவிகள் மானியத்துடன் பெறுவதற்கான ஆணையும், படைவீரர் கொடிநாள் 2017-ம் ஆண்டிற்கான படைவீரர் கொடிநாள் வசூலில் அதிக வசூல் புரிந்தமைக்காக அரசு முதன்மை செயலாளர் அவர்களால் வழங்கப்படும் பாராட்டுச்சான்றிதழ் மற்றும் வெள்ளிப்பதக்கத்தினை அரசு அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.02.2020) வழங்கினார்கள்.**

---------------

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தாட்கோ அலுவலகம் மூலம் தொழில் முனைவோர் திட்டம் மற்றும் இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 12 பயனாளிகளுக்கு ரூ.68,35,385 மதிப்பில் வங்கி கடனுதவிகள் மானியத்துடன் பெறுவதற்கான ஆணையும், படைவீரர் கொடிநாள் 2017-ம் ஆண்டிற்கான படைவீரர் கொடிநாள் வசூலில் அதிக வசூல் புரிந்தமைக்காக அரசு முதன்மை செயலாளர் அவர்களால் வழங்கப்படும் பாராட்டுச்சான்றிதழ் மற்றும் வெள்ளிப்பதக்கத்தினை 25 அரசு அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.02.2020) வழங்கினார்கள்.

குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, ஆக்கிரமிப்பு அகற்றக்கோரியது, பட்டா மாறுதல், சாதிச்சான்றுகள், இதர சான்றுகள் மற்றும் நிலம் தொடர்பான 156 மனுக்களும், குடும்ப அட்டை தொடர்பான 10 மனுவும், முதியோர் உதவித்தொகை, விபத்து நிவாரணத் தொகை, மாற்றுத்திறனாளிகள், நலிந்தோர் நலத்திட்ட உதவிகள் மற்றும் விதவை உதவித்தொகை கோரி 57 மனுக்களும், சத்துணவு அமைப்பாளர் பணி மற்றும் வேலைவாய்ப்பு கோரியது தொடர்பான 78 மனுவும், ரோடு, தெருவிளக்கு, தண்ணீர் இணைப்புகுழாய், பஸ் வசதி, தொகுப்பு வீடு மற்றும் இதர அடிப்படை வசதிகள் கோரி 17 மனுக்களும், புகார் தொடர்பான 12 மனுக்களும், கல்வி உதவி தொகை வங்கி கடன் மற்றும் இதர கடன் வசதிகள் கோரியது 32 மனுக்களும், திருமண உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், இரண்டு பெண் குழந்தைகள் திட்டம், சலவைப்பெட்டி, தொடர்பாக 47 மனுக்களும், பென்சன், நிலுவை தொகை கேட்டல் மற்றும் ஓய்வூதிய பயன்கள் மற்றும் தொழிலாளர் நல வாரியம் தொடர்பான மனுக்கள் தொடர்பாக 07 மனுவும், இயற்கை பேரிடர் நிவாரணம் தொடர்பாக 1 மனுவும், என மொத்தம் 417 மனுக்களும், இதர மனுக்கள் 141 என மொத்தம் 558 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள்.

குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.தா.சாந்தி அவர்கள், சமூகபாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.பழனிதேவி, மாவட்ட பழங்குடியினர் நல அலுவலர் திரு.ரெங்கராஜ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.இரவிச்சந்திரன், மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள், பொதுமக்களும் பங்கேற்றனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.